புதிய கல்வித் திட்டத்தில் இந்தித் திணிப்பு - ஏழைகளின் புறக்கணிப்பு

தலைவர் கலைஞர்

பேராசிரியர்

ஆற்றிய உரைகளின்

தொகுப்பும் சுருக்கமும்

தலைமைக் கழக வெளியீடு

புதிய கல்வித் திட்டத்தில் இந்தித் திணிப்பு - ஏழைகளின் புறக்கணிப்பு

171. ம.க-

தலைவர் கலைஞர்

பேராசிரியர்

ஆற்றிய உரைகளின் சுருக்கமும்
கழகப் பொதுக்குழு
நிறைவேற்றியுள்ள தீர்மானமும்

தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
ஈசுவரவடிவுஅகம் - குளித்தலை.

★

தலைமைக்கழக வெளியீடு
திராவிட முன்னேற்றக் கழகம்
508, அண்ணாசாலை, சென்னை-600 018

32024
409.5411

விலை: ரூ. 1-00

அச்சிட்டோர்:
ஸ்ரீ கோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி: சென்னை-5.

புதிய கல்வித் திட்டத்தில் இந்தித் திணிப்பு - ஏழைகளின் புறக்கணிப்பு

தி. மு. க. பொதுக்குழு தீர்மானம்

இந்தி மொழியின் ஆதிக்கத்திற்கு வழி செய்வதையே நோக்கமாகக் கொண்டு, அதற்கெனப் பலவகையிலும் தந்திரமாகத் திட்டமிட்டு வரும் மத்திய அரசு, மாநிலத்தின் உரிமையாக இருந்த கல்வித்துறையிலும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டு, ஒரு புதிய தேசியக்கல்வித் திட்டம் என்னும் பெயரில் மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளியை ஏற்படுத்தவும், அதில் இந்தியைப்பாடமொழியாகவும் பயிற்சி மொழியாகவும் நுழைத்திடவும் முனைவது, தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் இந்தியைத்திணிக்கவும், இந்தி பேசாத பிறமொழியினர் அதற்கு அடிமைப் படவும் செய்யும் சூழ்ச்சியாவதால், அந்தத் திட்டத்தைக் கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும், கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் 4-6-86 அன்று, சென்னையில் கூடிய தி. மு. க. பொதுக் குழு நிறைவேற்றிய தீர்மானம்:—

ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கென மத்திய அரசினரால் கொண்டு வரப்படும் புதிய கல்வித் திட்டம்—பலவகையிலும் மாநில மக்களின் நியாயமான மொழி—கலை—நாகரிக உரிமைகளில் தலையிட்டு ஆதிக்கம் செலுத்தும் முயற்சியாக அமைந்துள்ளது.

அரசமைப்புச் சட்டத்தில்—மாநில உரிமைப் பட்டியலில் இடம் பெற்றிருந்த கல்வியை முறைகேடாகப் பொதுப்பட்டியலுக்கு மாற்றம் செய்ததனைக் கைவிட்டு மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என மாநிலங்கள் பல வலியுறுத்தி வருவதைப் புறக்கணிப்பதுடன்,

கடந்த காலத்தில் (ஒரு நூற்றுண்டுக்கு மேல்) மாநிலங்களே (பழைய மாகாணங்கள்) மக்களுக்கான கல்வியை வழங்கும் பொறுப்பை ஏற்று, அதற்காகும் செலவுத்தொகை முழுவதையும் ஏற்றுள்ளதையும், ஒவ்வொரு பல்கலைக் கழகமும்-கல்லூரிகள் பலவும்-சுயாட்சி அமைப்பாகச் செயற்பட்டு வருவதையும், அப்படிப்பட்ட பல்வகை தனிச்சிறப்புக்கும் இடமளிக்க வேண்டியது கல்வித் துறை என்பதையும் கருத்தில் கொள்ளாது. ஒரே வகையான மத்திய கல்வித் திட்டத்தை புகுத்துவதும், அத்திட்டத்தின் பெயரால், இந்தி மொழியைப் புகுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இந்தியைப் பயிற்றுவிக்கவும் பயிற்சி மொழியாக்கவும் வழி செய்வதும், இந்தியாவில் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டதாகக் கூறும் வட மாநிலங்களில், தென்மொழி ஏதும் பயிலப் படாததுடன், ஆங்கிலமும் ஒதுக்கப் பட்டு, ஒரே மொழியாக 'இந்தி'யே பெரும்பாலும் பயிற்றுவிக்கப்படும் நிலையில், இருமொழித் திட்டத்தையே ஏற்று செயல்படுத்தும் தமிழ்நாட்டில் மூன்ருவது மொழியாக இந்தியைப் பயிற்றுவிக்க முனைவதும், பெரும்பாலும் மேட்டுக் குடிமக்களுக்காகவே பயன்படும் வண்ணம் கல்வித்துறையை திசை திருப்புவதும்,

அதற்கெனவே, மாவட்டந் தோறும் பெரும் பொருட் செலவில் மாடல் பள்ளி (நவோதயா பள்ளி) தொடங்க முற்படுவதும்—

மாநில உரிமையைப் பறித்து இந்தித் திணிப்பை நிறைவேற்றும் சூழ்ச்சியான திட்டம் ஆவதால் இப்பொதுக்குழு இதனை வன்மையாகக் கண்டிக்கிறது.

மொழி வழி மாநிலம் மக்களின் உரிமையாவதால், அந்த உரிமையைக் குலைக்கும் இந்த முயற்சியை முறியடிக்க வேண்டும் என்று இப்பொதுச்குழு மக்களைக் கேட்டுக் கொள்கிறது."

தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
ஈசுவரவடிவு அகம் - குமி...

தலைவர் கலைஞர்

[இந்தி ஆதிக்க நோக்கத்தில், புதிய தேசியக் கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்கி, மாநிலங்களில் உள்ள மாவட்டந் தோறும் ஒரு மாதிரிப் பள்ளியை (நவோதயா பள்ளி) நிறுவ முற்பட்டு. பண்டித ஜவர்கலால் நேரு அளித்த வாக்குறுதிக்கு மாறாக, தமிழ்நாட்டிலும் இந்தியைத் திணிக்கத் திட்டமிடும் மத்திய அரசின் சதியைக் கண்டித்தும் எதிர்த்தும் தலைவர் கலைஞர் அவர்கள் 10-6-86 அன்று நாகர்கோவில் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்:]

கழகத்தினுடைய பொதுக்குழு நடைபெற்று அதில் மிக முக்கியமான தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப் பட்டு, அந்தப்பொதுக்குழு தீர்மானங்கள் சென்னை சீரணி அரங்கிலே நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திலே விளக்கிச் சொல்லப்பட்டு, அதற்குப்பிறகு ஆறுநாட்கள் கழித்து இந்தக் குமரி மாவட்டத்திலே கலந்து கொள்கிறேன்.

கழகப் பொதுக்குழு கூடி எத்தகைய தீர்மானங்களை வடிவெடுத்திருக்கிறது என்பதை நீங்கள் ஏடுகளில் கண்டிருக்கக்கூடும்.

''இந்தியைத் திணிக்க மாட்டோம்!'' ''இந்தியைத் திணிக்க மாட்டோம்!'' என்று கூறிக்கொண்டே மத்திய அரசு இந்தி பேசாத மாநிலங்களில்-அதிலும் குறிப்பாக இந்தியை எதிர்த்து 1938-முதற்கொண்டே போராடிக் கொண்டிருக்கின்ற தமிழ் மாநிலத்தில்—இன்றையப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்கள் தேவையற்ற விதத்தில் இந்தியைத் திணிக்க முயன்று கொண்டிருக்கிறார்.

அதிலும் குறிப்பாகப் புதிய கல்விக் கொள்கையின் படி மாவட்டங்கள் தோறும் 'மாதிரி'ப்பள்ளிகள் அமைப்ப

தென்றும், அவை ஒவ்வொன்றிற்கும் இரண்டு கோடி ரூபாய் செலவில் நவீனவசதிகளோடு அமைப்பதென்றும் கவர்ச்சிகரமான அறிவிப்புக்கள் டெல்லியிலிருந்து பிறப்பிக்கப்படுகின்றன.

நல்ல வேளையாக இதுவரை தமிழ்நாட்டு அரசாங்கம் இந்த 'மாதிரி'ப் பள்ளிகளை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறியிருக்கிறது.

நான் ஜாக்கிரதையாகச் சொல்லியிருக்கிறேன்-இது வரையில் தமிழ்நாட்டு அரசாங்கம் கூறியிருப்பதாக.

நாளைக்கு இராஜீவ்காந்தி ஒருதொலைபேசி மூலமாக நம்முடைய முதலமைச்சரை அழைத்து ''ஏற்றுக் கொள்கிறயா? இல்லையா?'' என்று கேட்டால், என்ன ஆகும் என்று எனக்குச் சொல்லத் தெரியாது. ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த 'மாதிரி'ப் பள்ளிக்கூடங்கள் தமிழ் நாட்டிலே கூடச் சில பேரை குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இதனால் இந்தி பரவி விடுமா? இந்தி ஆதிக்கம் வந்து விடுமா என்று சில பேர் கேட்கிறார்கள். ''ஒரு மாவட்டத்திற்கு இரண்டு கோடிரூபாய் தருகிறார்களே! அதையெல்லாம் எதிர்க்கலாமா?'' என்று கூடக் கேட்கிறார்கள். தயவு செய்து எண்ணிப் பாருங்கள்.

ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கின்ற கிராமப் புறத்துப் பள்ளிக்கூடங்கள் எத்தனை கூரையின்றி இருக்கின்றன! எத்தனை கரும்பலகையின்றியும், கரும்பலகை இருந்தால் சாக்பீஸ் இன்றியும், பிள்ளைகளுக்கு சிலேட், புத்தகங்கள் இன்றியும் இருக்கின்றன! எத்தனைப் பள்ளிகள் வெய்யில் அடித்தால் காய்ந்தும் மழை பெய்தால் நனைந்தும் தவிக்கின்றன! சாக்கடையோரத்தில் உள்ள பள்ளிகள் எத்தனை! கட்டிடம் இல்லாமையால் மரத்தடியில் நடைபெறும் பள்ளிகள் எத்தனை! இங்கெல்லாம் வசதியோடு கல்வி பெற மத்திய அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செலவிடுவதாகக்கூறும் அந்த

இரண்டு கோடி ரூபாய் மாநிலத்திற்கு வழங்கப் படுமே யானல் அது பயனுடையதாக இருக்காதா?

''நாங்கள் இந்தி வெறியர்களாக இருப்போம். தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்குவதற் கானதிட்டத்தை வகுப்போம்!'' என்ற சதித்திட்டத்தோடு வருவது தான், அந்த இரண்டு கோடி ரூபாய் என்பதை மறந்துவிடக் கூடாது!

பத்து அல்லது பதினைந்து ஆண்டு காலத்திற்குப் பின்பு இந்தியாவில் தமிழன் இரண்டாந்தரக் குடிமகன் என்ற நிலையை உருவாக்க, இன்றைக்கு டெல்லி தரு கின்ற விலை அந்த இரண்டு கோடி ரூபாய் என்பதை மறந்துவிடக் கூடாது.

எனவே, இரண்டு கோடி தந்தால் வேண்டாமென்று சொல்லவில்லை; வரட்டும்; அது ஏழை எளிய பிள்ளைகள் கல்வி பெறப் பயன்படட்டும்! மேட்டுக்குடியினர் மேலும் பயன்படவே ஒரு புதிய திட்டமா?

இங்கே இடிந்து கிடக்கிற பள்ளிகள் புதிதாக மாற்றப்படப் பயன்படட்டும். ஏற்கெனவே இருக்கின்ற பள்ளிகளுக்கு வசதிகளை ஏற்படுத்த இந்தப் பணம் பயன் படட்டும்.

''இல்லை; இந்தியைப் பரப்பத்தான் பயன்படும்; இந்தியை ஏற்கிற மேட்டுக்குடிமக்களுக்கு வாழ்வு அளிக் கவும், கல்வியறிவு அளிக்கவும்தான் பயன்படும்; எங் களுக்கு மேட்டுக்குடி பற்றித்தான் கவலை!'' என்ற நிலை யில் இந்த இரண்டு கோடி ரூபாய் வருமேயானல், இந்த மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை, மொழி ஆதிக் கத்தை முழு மூச்சோடு எதிர்ப்பதற்கு தமிழ்நாடு தயங் காது என்பதை இந்தப் பொதுக் கூட்டத்தின் மூலமாக நான் டெல்லியிலே இருக்கின்ற பெரியவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்று நேற்று; எத்தனை ஆண்டு காலமாகத் தமிழ் நாடு இந்தியை எதிர்க்கிறது!

1937-38ம் ஆண்டு சென்னை இராஜதானியில் அன்றைக்குப் பிரதமர் சக்ரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார். அவர் தான் இந்தியைக் கட்டாயமாக அனை வரும் படிக்க வேண்டும் என்ற ஒரு ஆணையையும் பிறப் பித்தார். அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மறைமலையடிகளார், தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆகியோரால் அன்றைக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. ஆயிரக்கணக்கானவர்கள் சிறைச்சாலைக் குச் சென்றனர்.

1937-38ல் எந்த இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தாரோ அதே சக்ர வர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்தான் 1963-64ல் சொன்னார் ''இந்தி, தமிழர்களை-தமிழ்நாட்டு மக்களை—இரண்டாம்தர மக்களாக ஆக்கிவிடும். எனவே இந்தியை நான் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்று!

ஒரு காலத்திலே கட்டாயமாக்கியவர்—பின்னர்— இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப்போர்க்கோலம் பூண்டார். ''இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கில மொழியே நீடிக்கும்'' என்று பண்டித ஜவஹர்லால் நேரு உறுதி மொழி கொடுக்கிற அள விற்கு 1965-ம் ஆண்டிற்கு முன்பே மொழிப்போராட்டம் தமிழகத்தில் இருந்தது.

பின்னர் 1965ல் தமிழகத்தில் நடந்தது போராட்டம் என்று கூடச் சொல்ல மாட்டேன். மொழிப்புரட்சியே நடைபெற்றது. அந்த மொழிப்புரட்சியில் அரசாங்கத் தின் கணக்குப்படி மாண்டவர்கள் தொகை நூற்றுக் கணக்கில் இருக்கலாம். ஆனால், உண்மையில் மாண்ட வர்கள்ஆயிரக்கணக்காகும். மாண்டவர்களுடைய பிணங் களை உறவினர்களுக்குக்கூட காட்டாமல் காடு, மலை, வனாந்தரங்களில் பெரிய பெரிய குழிவெட்டிப் பிணங் களைப் புதைத்த நிகழ்ச்சி நினைவுக்கு வராமல் இல்லை.

அன்று தமிழகத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்காத ஊரே இல்லை. மாணவர் உலகம் போர்க்கொடி தூக்கியது. அப்படிப்பட்ட 1965-ஐ மீண்டும் சந்திக்க விரும்புகிறதா இந்திமொழி ஆதிக்கம்? அதற்குப் பிறகு1967ல் தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா முதல்வராகப் பொறுப்பு ஏற்ருர். அவர் பொறுப்பேற்றவுடன் செய்த முதல் காரியம் 'இனிமேல் தமிழ்நாட்டில் இந்திமொழி தேவையில்லை. தாய் மொழியாம் தமிழ்; அடுத்து ஆங்கிலம் ஆகிய இரு மொழித்திட்டம் தான். இனிப் பள்ளிகளில் மும்மொழித் திட்டம் தேவையில்லை.'' என்று அறிவித்தது தான்.

இன்று வரையில் இதை யாரும் மாற்றவில்லை. மாற்ற முடியவில்லை. மாற்ற முடியாது. அப்படிப்பட்டதொரு உணர்வு இப்பொழுது இல்லையென்று டெல்லி கருத வேண்டாம்.

நீறு பூத்த நெருப்பாய் கனல் காட்சியளிக்கும், ஆனல் தொட்டால் தான் அதனுடைய அனல் தெரியும்.

அதைப் போல தமிழ்நாடு இன்றைக்கு நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. அந்த நீறு ஊதப்படுமேயானல் தீ மீண்டும் எழும்பும். கனல் தெறிக்கும். தமிழகம் போர்க்களமாகும் என்று இந்தி ஆதிக்கவாதிகளுக்கு நான் மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்கிறேன்.

இந்த எச்சரிக்கையை அடிப்படையாகக் கொண்டு தான் தமிழ் நாட்டு மக்களுடைய உணர்வை எடுத்துக் காட்டி, கடந்த சூன் 4ம் நாள் சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழு இந்த 'மாதிரிப் பள்ளி'களை ஏற்றுக் கொள்ள மாட்டோமென்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழர்களின் எதிர்ப்பை மீறி தமிழகத்தில் இந்தியைத் திணிக்கும் ''மாதிரிப் பள்ளிகள்'' அமைக்கப்படுமானல், முன் மாதிரியாக எதையும் குறிப்பிட்டுக் காட்ட முடியாத அளவுக்கு இங்கு ஒரு மொழிப் போர் மூளும் என்று மத்திய அரசாங்கத்தை எச்சரிக்கிறேன்,

பொதுச்செயலாளர் பேராசிரியர்

[மத்திய அரசின் புதிய தேசியக்கல்வித்திட்டத்தின் விளை வாக, தமிழகத்தில் மாவட்டந்தோறும் ஒரு மாதிரிப் பள்ளி என்ற பேரால் வடவரின் இந்தியைத்திணிக்க மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையைக் கண்டித்தும் எதிர்த்தும், 4-6-86 அன்று தி. மு. கழகக் சார்பில் மெரீனக் கடற்கரை யில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும், திருச்சியில் 10-6-86 அன்று திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற புதிய தேசியக் கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாட்டிலும் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பும் சுருக்கமும்.]

''கல்வி ஒரு சவால்'' என்ற தலைப்பிட்டு கடந்த ஆண்டு ஒரு அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டது. அந்தச் சவால் ''மாநில அரசுக்கு ஒரு சவால்'' என்று மத்திய அரசு விடுக்கின்ற அறைகூவலாக இன்றையத் தினம் மாறியிருக்கிறது.

இங்கே பல்வேறு வித சிந்தனையும் பயிற்சியும் பெற்ற பேராசிரியர்களும் பிற துறையினரும் (மத்திய அரசாங்கத்தினுடைய இந்தப் புதிய தேசியக் கல்வித் திட்டம் மோசமானது; நல்ல நோக்கம் இல்லாதது; தவறான எண்ணத்தின் அடிப்படையிலே பிறந்தது; மக்க ளுக்கிடையில் வசதி பெற்றவர்களுக்கே வாய்ப்பளிப்பது; மாநிலத்தினுடைய உரிமையைப் பறிப்பது; இயல்பாகப் பெற்றிருக்க வேண்டிய இன உணர்வைக் கூட மக்கள் பெறுவதற்குத் தடையாக இன்றைய தினம் புகுத்தப்படு வது; சமதர்மத்திற்குஇடம் தராதது; வரி செலுத்துகின்ற ஏழை, பாட்டாளி மக்களை வஞ்சிப்பது; மாநிலத்து மக்களின் கல்வி உரிமையைப் பறிப்பது முதலாகப் பல் வேறு விளக்கங்களை அத்தனைப் பேரும் எடுத்துக்கூறி யிருக்கின்றார்கள்,

உண்மையாகவே இந்தக் கல்வித்திட்டம் இந்தியாவைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாலே கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிவாரி மாநிலங்களை மதிக்காதவர்களாலே உருவாக்கப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லப்போனல், இந்தியாவில் தன்னுடைய தாயார் எப்படிப்பட்ட அரசியல் அனுபவம் பெற்றுர் என்பதையே புரிந்துகொள்ளத் தவறியவராலே கொண்டு வரப்பட்டது. தன்னுடைய பாட்டனர் தாயாருக்கு எழுதிய கடிதங்களையே படித்துப் பார்க்காதவராலே கொண்டுவரப்பட்டது என்று இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றி நான் சுருக்கமாகச் சொல்லமுடியும்.

பிரதமராக இருக்கிற ராஜீவ்காந்தி, இந்தியாவினுடைய வரலாற்றைப் படித்துப் பார்த்தாரா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது.

இப்போது உள்ள கல்வியில் படிப்படியாகச் செய்யக்கூடியது என்ன என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்காமல்- ஒரு கற்பனையான, மக்களுக்குப் பயன்படாத, பெரும்பான்மையான சமுதாய மக்களை வெறுப்படையச் செய்கிற, மாநில மக்கள் மத்திய அரசாங்கத்தின் நோக்கத்தைப்பற்றிக் கேவலமாகக்கருதக்கூடிய ஒரு திட்டத்தைத்தான் இன்றைய தினம் ராஜீவ்காந்தி மத்திய அரசின் சார்பில் அறிவித்திருக்கிருர்.

முன்னர் மதராஸ் மாகாணமாக இருந்த இந்தத் தமிழ்நாட்டிலேதான் அகில இந்தியாவிலேயே தரமான கல்வி வளர்ந்தது. அடுத்த நிலையிலே கல்வி வளர்ந்தது- வங்காளத்தில், அதற்கும் அடுத்தது பம்பாய் உள்ள மராட்டியத்தில்.

டெல்லியிலே கல்வி ·வளர்ந்ததாகவே வரலாறு கிடையாது. இன்னுங்கேட்டால் பிரதமர் ராஜீவ்காந்தி உத்தரபிரதேசத்திலுள்ள அலகாபாத்தில் பிறந்தவர். அந்த உத்திரபிரதேசத்தில் உள்ள மக்கள் தரமானகல்வி

பெறச் செய்வதற்கான வழிவகை பற்றி அவருக்கு எண்ணம் ஏற்பட்டதா?

அங்கேயும் சில குறிப்பிடத்தக்க பள்ளிக் கூடங்கள்- குறிப்பிடத்தக்க கல்வி நிலையங்கள் மிக உயர்ந்த நிலை யிலே நடைபெறுகிறது என்பது உண்மை. மொத்தத்தில் கல்வி கற்காதவர்களுடைய எண்ணிக்கை ஏராளமாக இருப்பது உத்தர பிரதேசம், பீகார் முதலான இந்தி வட்டாரந்தான்.

அந்த இந்தி வட்டாரத்திலேயே கல்வி வளராத போது, அகில இந்தியாவிலே கல்வியை வளர்ப்பதற்காக என்று சொல்லி, ஒரு புதிய—கவைக்கு உதவாத, பெரும் பான்மை மக்களுக்கு உதவாத திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள், முதல்வர்கள், மற்றும் பலதுறை வல்லுநர்களும் இத் திட்டத்தை எதிர்க்கிறார்கள்.

இருந்தாலும் ராஜீவ்காந்தி இந்தத் திட்டத்தைப் பற்றி மறுபரிசீலனை கிடையாது என்று அறிவிக்கச் செய்கிறார்.

இந்தியா சுதந்திரம் பெற்று அரசியல் சட்டம் வகுக் கப்படுவதற்கு முன்பிருந்து, வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலிருந்து, மாநில அரசின் பொறுப்பில் இருந்து வந்த கல்வியை, மத்திய அரசு இந்தப் புதிய கல்வித் திட்டத்தின் மூலம்தான் மேற்கொண்டு ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது.

இந்தத் திட்டம் கல்வியைப் பரப்ப விரும்புவதாக நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். கல்வி பெறாத மக்களுக் குக் கல்வி தருவதற்காகத்தான் இந்தத் திட்டம் என்றும் கருதுவதற்கு இடமில்லை.

மத்திய அரசு, மக்களின் கல்வியை, தான் விரும்பும் வகையில் உருவாக்குவதற்கு என்ன நியாயத்தை நீங்கள் காண முடியும்?

வடக்கே சில மாநிலங்கள் அடியோடு கல்வி வளர்ச்சிக்கு உரிய முறையில் செயலாற்ருமல் இருக்கலாம்!

தெற்கே உள்ள மாநில அரசுகள் வடக்கே உள்ள மாநில அரசுகளைவிட, கல்வி பரவுவதற்கு உரிய வழி முறைகளைச் செயல்படுத்தியிருக்கின்றன.

கேரளத்திலேதான் இந்தியாவிலேயே கல்வி கற்றவர்கள் எண்ணிக்கை அதிகம். அதற்கடுத்து இரண்டாவது மூன்ருவது நிலையில் தமிழ்நாடு இருக்கிறது.

இது பெருந்தலைவர் காமராசர் முதல்வராக இருந்த காலத்திற்கு முன்னர் நீதிக்கட்சி காலத்திலேயே தொடங்கிய ஒரு பாரம்பரியத்தினுடைய தொடர் விளைவாகும். வேறு பல மாநிலத்தைவிட, தமிழகத்தில் கற்றவர்களுடைய எண்ணிக்கைச் சற்று அதிகம்.

கல்வி என்பது ஒரு கடல். அந்தக் கல்விக் கடலில் மக்கள் இன்ன திசையிலேதான் குதிக்கவேண்டும், இப்படித்தான் அந்தக் கல்வியைப் பெறவேண்டுமென்று வரையறுக்க முடியாது.

அதிலே பல்வேறு வகையாகவும், முறைகளிலும் கல்வியை வளர்க்க வேண்டியது அவசியம். ஒரே வகையான கல்வியை வழங்குவது என்பது முடியாது என்பது கூட அல்ல, கூடாது; வளர்ச்சிக்கு அது உதவாது. ஒரேவிதமான கொள்கையைக்கொண்ட சோவியத்யூனியனிலேகூட கல்வி வகைவகையாகத் தரப்படுகிறது.

சோவியத்தின் சோசலிசக் கொள்கையை, பட்டாளி ஆட்சிக் கொள்கையை, தொழிலாளர் அரசு என்ற கொள்கையை எதிர்க்கின்ற கருத்துக்கு அங்கே இடம் கிடையாதே தவிர, மாநிலந்தோறும் கல்வி பல்வேறு வகையாக வளர்க்கப்படுகிறது.

ஆனல், கல்வியே தேவையான அளவு பரப்பப் படாத நம்முடைய நாட்டில், கல்விக்கான அடிப்படையே அமைக்கப்படாத இந்த நாட்டில் - கல்வி பெருத

மக்களின் எண்ணிக்கை இன்றைக்கு உலகத்திலேயே மிக வேகமாக வளரவிடப்பட்டுள்ள இந்த நாட்டில்—புதிய திட்டம் வருகிறது, ஒரு சாரார் பயனடைவதற்காக்!

14 வயது வரையில் அனைவருக்கும் கட்டாயமாகக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற அரசியல் சட்டத்தினுடைய விதியைக்கூட காப்பாற்ற வக்கற்ற இந்த நாட்டில் - கல்விக்குச் செலவழிக்கப்படவேண்டிய அளவு நிதி கூட இன்னும் செலவழிக்கப்படாத இந்த நாட்டில், சட்டியில் இல்லாமலே சோறு பரிமாறுவதைப் போல், இலையில்லாமலே தரையில் போட்டுச் சாப்பிடுவதைப் போல், பஞ்சத்திலே அடிபட்ட இந்த நாட்டில் ஒரு விதமான ஆதிக்க வாய்ப்புடைய கூட்டம் சலுகை பெறுவதற்காக, வாய்ப்புப் பெறுவதற்காக, இந்தியா முழுவதும் அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்வதற்கு வாய்ப்பாக இன்றைய தினம் இந்தக் புதுக் கல்வித் திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது.

அகில இந்தியாவிலேயே ஒரு புதிய கல்வித்திட்டம்-வெகு நூதனமான கல்வித் திட்டம் — டெல்லித்துரைத்தனத்தாலே அறிமுகப் படுத்தப்பட வேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்று சொல்லி-இரண்டு ஆண்டு காலமாகவே அது பற்றிய பேச்சுதொடங்கி-கடந்த ஆண்டில் அதற்கான அறிக்கை தயாராகி, திட்டம் மத்தியஅரசால் எல்லா மாநிலங்களிலேயும் நிறைவேற்றப்பட இருக்கிறது.

மாவட்டந்தோறும் ஒரு மாடல் பள்ளி—'நவோதயா' பள்ளி-தொடங்கப்பட இருக்கிறது. அந்த மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்படுமானால் கிராமத்திலே இருக்கிற பிள்ளைகள் அதிலே பயிலுகிற வாய்ப்பைப் பெறுவார்கள் என்றெல்லாம் கூறப்படுகிறது.

அகில இந்தியாவிலே கிராமத்துப் பிள்ளைகள் பயில்வதற்கு மாவட்டத்துக்கு ஒரு பள்ளி என்றால் அதிலேயே அதன் பித்தலாட்டத்தை எவரும்

புரிந்து கொள்ளலாம். ஏறத்தாழ முப்பது இலட்சம் பேர் நாற்பது லட்சம் பேர் வாழ்கிற மாவட்டத்துக்கு ஐநூறுபேர் படிக்கிற ஒரு பள்ளி! அந்தப் பள்ளியிலே கிராமத்துப் பிள்ளைகள் வாய்ப்புப்பெறுவார்களாம். கிராமத்துப் பிள்ளைகளை முன்னேற்றுவதற்காக, மத்திய அரசு இந்தப் பள்ளிகளைத் தொடங்குகிற காரணத்தால் ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு புதிய இந்தியாவையே உருவாக்கப் போகிறார்; இந்தியாவிலுள்ள மனித சக்தியினுடைய மாண்புகளை வளர்க்கப் போகிறார்; நவீன யுகத்தை உருவாக்குகிறார்; இந்தியாவையே கம்ப்யூட்டர் மயமாகமாற்றப்போகிறார்; இருபத்தோராவது நூற்றாண்டில் 1986ஆம் ஆண்டிலேயே அடியெடுத்து வைக்கிறார் என்றெல்லாம் பேசப்படுகிறது. ...அந்தப் புதிய கல்வித் திட்டத்தின் மூலமாக, இந்தி பயிலத் தேவையில்லாத மாநிலங்களில் உள்ள மக்களை இந்தி மொழியைப் படிக்க வைக்க, இந்தி மொழியைப் பயிற்சி மொழியாக்க, அந்தந்த மாநில மக்களின் தாய் மொழியின் உரிமைக் குரல் எழ விடாமல்-இந்தி ஆதிக்க மாயையிலே அந்த மக்களை மயக்குவதற்காகச் சில கோடிகள் ஒதுக்கி-ஒவ்வொரு மாடல் பள்ளிக்கும் ஏறத்தாழ இரண்டு கோடி ஒதுக்குவதாகச் சொல்லி, அதன் மூலமாக அகில இந்திய அரசு, மாநிலங்களிலே உள்ள கல்வி நிலையங்கள் யாவும் தரங்குறைந்தன; மாறாகத் தரம் உயர்ந்த கல்வியை மத்திய அரசு தருகிறது; ஒரு மாவட்டத்துக்கு ஒரு பள்ளியின் மூலமாக அப்படிப்பட்ட கல்வி வழங்குகிறது. என்று ஒரு மயக்க உணர்வு ஊட்டி கல்வித் துறையினைத் தனது நோக்கத்துக்கு இறையாக்கிட முனைகிறது.

சில பத்திரிகை ஆசிரியர்கள் கூட மத்திய அரசு இப்படிச் சொல்கிறதே என்று, விவரங்களையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், இந்தப்பள்ளிகளை நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள்; தஞ்சை மாவட்டத்து மக்கள் திருச்சி மாவட்டத்து மக்கள் வரவேற்கிறார்கள் என்று ஆங்காங்கே இருக்கிற இரண்டொரு நிருபர்கள் மூலம் அவரவர்களுக்கு கிடைக்கிற சரடுகளை பத்திரிகையிலே

வெளியிடக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமை இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் திட்டத்திலே இருக்கிற ஆபத்தைப் பற்றி, நான் உள்ளபடியே கவலையோடு தான் இங்கே பேசுகிறேன்.

ஏறத்தாழ ஒரு நூற்றுண்டுக்கு மேலாக-வெள்ளைக் காரர்களுடைய ஆதிக்கம் உச்சக் கட்டத்திலேயிருந்த அந்தக் காலத்திலேயிருந்து 'கல்வி' மா நிலங்களினுடைய உரிமையாகத்தான்-அவற்றின் பொறுப்பிலேஇருந்ததே தவிர, எந்தக் காலத்திலேயும் மத்திய அரசு நாடெங்கும் வழங்குகிற பொறுப்பை ஏற்றதில்லை.

இந்தியாவிற்குச் சுதந்திரம்கிடைத்ததற்குப் பின்னர் கூடப் பதினுன்கு வயது வரையிலே உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாகக்கல்வி வழங்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் இருந்தாலும், அதற்கான ஏற்பாட்டிற்கு ஒரு பைசா கூடச் செலவிட முன்வராத அரசுதான் மத்திய அரசு.

இந்தியா முழுவதுமுள்ள எல்லா மக்களுக்கும் பதினுன்கு வயது வரையிலே கல்வி பெறுவது அடிப் படையான உரிமை; அந்தக் கட்டாயக் கல்வி இன்று வரை பதினுன்கு வயது வரையில் உள்ள லட்சக்கணக் கான குழந்தைகளுக்குத் தரப்படவில்லை; அதற்காக நிதி ஒதுக்கவில்லை மத்திய அரசு.

பள்ளிக்கூடங்களிலே எழுதும் கரும் பலகையில்லை; ஒரு பாதிப் பிள்ளைகளுக்குப் புத்தகம் இல்லை. உயர்நிலைப் பள்ளியிலே ஆசிரியர்களுக்கு மேசை நாற்காலிகள் இல்லை. இன்னுங்கூட மூன்று வகுப்பு சேர்ந்து நான்கு வகுப்பு சேர்ந்து நடக்கும் ஓராசிரியர் பள்ளிகள் பல ஆயிரம் இருக்கின்றன். இன்றுங்கூட கிராமங்க்ளிலே பள்ளிக்கூடம் எங்கே என்ருல் புளிய மரத்தைக் காட்டு கிருர்கள்; வேப்ப மரத்தைக் காட்டுகிருர்கள்-அங்கே தான் பள்ளிக்கூடமென்று!

அந்த அளவிற்கு வசதிபற்றுக்குறையாக இருக்கிற போது அவைகளுக்காக நிதி ஒதுக்கவில்லை. இன்றைக்குத் தமிழகத்தை எடுத்துக் கொண்டால், கல்விக்காக ஒதுக்கப் படுகின்ற தொகை ஆண்டுக்கு ஆண்டு விழுக்காடு அளவில் குறைகின்றது. கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, தமிழக அரசு கல்வித் துறைக்கு மொத்த வரவு செலவில் ஏறத்தாழ இருபத்து நான்கு சதவிகிதம் ஒதுக்கினால், இன் றைக்கு அது இருபத்து மூன்றாகி, இருபத்திரண்டாகி, மேலும் பகலுணவுத் திட்டத்துக்காக கல்வி நிதியிலிருந்து ஒரு எழுபது எண்பது கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்த நிதியுஞ்சேர்ந்து இருபது சதவிகிதமாக—பத்தொன்பது சதவிகிதமாக குறைந்திருக்கிறது.

எனவே, அந்த அளவுக்கு நிதி வழங்குகிற நிலையிலே குறைபாடு இருந்தாலும் கூட, தமிழ் நாட்டிலே மாநில அரசு கல்விக்கு வழங்கும் தொகை அறுநூற்று முப்பது கோடி என்றால், மத்திய அரசு வழங்குவது நாற்பத்தைந்து லட்சம்! அறுநூற்று முப்பது கோடிக்கு நாற்பந்தைந்து லட்சம்! செலவாகும் தொகையில் ஒரு விழுக்காடு கூடத் தரவில்லை.

அந்த மத்திய அரசு சொல்கிறது; மாநிலங்களிலே கல்வி யைப் பரப்புவதற்கு நாங்கள் மாடல் பள்ளிகள் நடத்து வோம் என்று. மத்திய அரசு 'மாடல்' பள்ளி நடத்துமாம். மாநில அரசு அதைப் பார்த்து 'டியூப்ளிகேட்' பள்ளி நடத்துமாம்.

மத்திய அரசு மாவட்டத்துக்கு ஒரு மாடல் பள்ளி தொடங்குவது ஏன்? ஒரு மாவட்டத்துக்கு நூறு, இருநூறு பள்ளிக்கூடங்கள் நடத்தப்படும் போது எதற்காக இதைச் செய்கிறார்கள்? ஒரே ஒரு பள்ளிக்கூடத்தை மிகுந்த வசதியுடையதாகப் பெருஞ் செலவில் நடத்தி அதில் இந்தியைப் புகுத்திவிட்டால், மக்களாகவே ஆங்கங்கே இந்தியைப் படிக்கிற நிலைமையை உருவாக்கிடலாம், அதற்குப் பின்னர் ஒரு பள்ளிக்கூடத்தைப் பத்துப் பள்ளிக் கூடமாகப் பெருக்கலாம் என்று திட்டமிடுகிறார்கள்.

இன்று மாநில அரசு நடத்துகிற பள்ளிக்கூடங்கள், நிதி வசதியில் மிகத் தாழ்ந்த நிலையிலே இருப்பதால் குறை

பாடுகள் இருந்தாலுங்கூட—கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் கட்டடமே இல்லாமல் இருந்தாலுங்கூட— போதுமான அளவிற்கு மாணவர்கட்கு கல்வி கற்பிக்கின்ற வசதியற்றிருந்தாலுங்கூட, இடையிலே ஒரேயொரு மத்திய மாடல் பள்ளி—ஜமீன்தாரர் பள்ளிக்கூடமாக—பணக்கார பிரமுகர்கள் கூட்டத்துக்கான பள்ளிக்கூடமாக—மத்திய அரசாங்கத்தினுடைய செலவில் உருவாவதால் என்ன பயன்? யாருக்கு நன்மை? கல்வியை முழு அளவிலே மத்திய அரசு எடுத்துக் கொள்வதற்காக, மாநில மக்களின் தனித் தன்மைகள், மொழி, கலை, நாகரிக வரலாற்று உணர்வுகள் கல்வித் துறையிலே இல்லாமல் செய்வதற்காக எடுத்துக்கொள்கிற முயற்சியே அது.

மத்திய அரசு அலுவலர்களுக்குக் கட்டாயமாக இந்திப் பயிற்சி! வங்கிகளிளெல்லாம் இந்திமூலமாக நடைமுறையில் அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான வழி முறைகள்! ரயில்வே நிலையங்களில் இன்றைக்கும் இந்திப் படிவங்கள் புகுத்தப்படும் நிலைமை! மேலும் மத்திய அரசு மிகப் பெருந் தொகையை இந்தி வளர்ச்சிக்கென ஒதுக்கித்தரும் அநீதி! இவ்வளவு இன்று நடைமுறையில் உள்ளது. அன்று அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது மாநிலத்தினுடைய உரிமைப் பட்டியலிலே தான் 'கல்வி' இருந்தது. மாநிலத்துக்குத்தான் அந்தப் பொறுப்பு. மத்திய அரசாங்கத்திற்குக் கல்வியிலே தலையிடுவதற்கான எந்தப்பொறுப்புமில்லை. வேண்டுமானால்—ஆலோசனைகளை வழங்கலாம்!

ஆனால், மத்திய அரசு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மாநிலப் பட்டியலிலே இடம் பெற்றிருந்த கல்வியைப் பொதுப்பட்டியலுக்குக் கொண்டு போனார்கள். பொதுப்பட்டியல் என்பது மத்திய அரசு விரும்பினால் அந்தப் பட்டியலிலேயுள்ள எந்தப் பொருள் பற்றியும் சட்டம் செய்யலாம்; உத்தரவு போடலாம்.

பொதுப்பட்டியலுக்குக் கல்வியைக் கொண்டுபோனதே தவறு என்று திராவிட முன்னேற்றக் கழகம் அன்றே கண்டித்தது. தமிழக அரசு—எம். ஜி. ஆர் அரசுகூட-அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் அந்த உரிமையை மீட்க எதிர்த்துப் போராடவில்லை.

பொதுப்பட்டியலுக்குப்போன கல்வி மாநில அரசுப் பட்டியலிலேதான் இருக்க வேண்டுமென்று தமிழகத்திலே யுள்ள நாம் மட்டுமல்ல; கருநாடகத்தினுடைய முதல்வர் ஹெறக்டே சொல்கிறுர். ஆந்திர முதல்வர் என். டி. ராமராவும், வங்காளத்திலேயுள்ள முதல்வர் ஜோதிபாசும் அந்தக் கருத்தைச் சொல்கிறுர்கள். தமிழக அரசும் அந்தக் கருத்துக்கு உடன்படுவதாகத் தெரிவித் துள்ளது. ஆனுல், மத்திய அரசினுடைய ஆதிக்கத்துக்கு உட்படுத்தவெனக் கொண்டு செல்லப்பட்ட கல்வி மாநில அரசினுடைய உரிமை பட்டியலில்தான் இடம் பெற வேண்டும் என்று பல மாநில அரசுகள் தொடர்ந்து கேட்டும்கூட, மத்திய அரசு அதைத் திரும்ப வழங்க முன் வரவில்லே. மேலும் கல்வி வளர்ச்சிக்கு மாநில அரசுகள் செலவிடுகிற தொகை—எல்லா மாநில அரசுமாகச் சேர்ந்து ஏறத்தாழப் பத்தாயிரம்கோடி ரூபாய் கல்விக்காக செல விடுமானுல்—மத்திய அரசு கல்விக்காக செலவிடுகிற தொகை ஒரு நூற்றைம்பதுகோடி; இருநூறு கோடி அளவிற்குத்தான் இருக்கும்.

அந்த நிலேயிலும் மத்திய் அரசு கல்வியிலே ஆதிக்கம் செலுத்த விரும்புவது எதற்காக? கல்வியை மத்திய அரசு கைக்கொண்டால் மாநிலங்களுடைய தனித் தன்மையை இழக்கச் செய்து விடலாம் என்ற எ்ண்ணத்தின் காரணமாகத்தான். சுருக்கமாகச் சொன்னுல், வைதிகம் தமிழ் மண்ணில் வளர்ந்த காலத்தில், வர்ணுசிரம தர்மத்திற்கு விதையூன்றப்பட்ட காலத்தில், வேத ஆகமக்கொள்கைகள் தமிழகத்து மக்களுக்கு உடன் பாடு இல்லா விட்டாலுங்கூட எப்படியோ அதைத் தமிழகத்து மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலே உருவாக்கப்பட்ட காலகட்டத்தில், எல்லாக் கோயில்களிலேயும் ஆண்டவனுக்குரிய வழிபாடு வடமொழி யிலேதான் நிகழ்த்தப்பட வேண்டும் என்னும் புதிய முறை புகுத்தப்பட்டு அது அன்றைக்கிருந்த மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு, இறை வழி பாட்டில் ஏற்றம் பெற்றிருந்த தமிழுக்கு அதனுல் ஏற்படுகிற தாழ்வை உணராமல் தமிழகத்து மக்களும் ஏற்றுக்கொண்ட வரலாறு போல, தமிழ் மக்களுடைய திருமண நிகழ்ச்சிகளெல்லாம் தமிழ்

மொழியிலேயல்லாமல் வடமொழியிலேயே செய்யப்படுகின்ற ஒரு வழக்கம் உருவாக்கப்பட்டதைப் போல, திட்டமிட்டுத் தொடர்ந்து, ஒரே குறியாக, மற்ற மொழிபேசும் மக்கள் தங்கள் தனித்தன்மையோடு தலைநிமிர முடியாமற் செய்வதற்காக, இந்தியைப் புகுத்துவதற்கென இந்த தேசியக் கல்வித் திட்டம் இன்றைய தினம் கொண்டு வரப் படுகிறது. ஏற்கப்பட்டுள்ள ஜனநாயக ஆட்சிமுறை வடிவத்தையே குலைக்கத் தீட்டப்பட்டுள்ள சதியே இந்தத் தேசியக் கல்வித்திட்டம்.

எனவேதான், இந்தத் தேசியக் கல்வித் திட்டத்தை எதிர்க்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்; நாடும் இருக்கிறது.

தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
ஈசுவரவடிவுஅகம் - குழித்தலை.

மாதிரிப் பள்ளி -
இந்தியைத் திணிக்கும் தந்திரப் பள்ளி!

"மாதிரிப் பள்ளிகளை இந்தி திணிப்புக்கு ஓர் உபாயமாக மத்திய அரசு கருதித் தந்திரம் புரியுமானால், மற்ற மாநிலங்கள் எப்படியோ, தமிழகம் அதை நிச்சயம் எதிர்க்கும்.

"மாதிரிப்பள்ளிகள் என்ற இந்தத் தந்திரப்பள்ளிகளில் இந்தித் திணிப்பு என்ற அநீதி மட்டுமின்றித் தாய்மொழிப் புறக்கணிப்பு என்ற கொடுமையும் கலந்திருக்கிறது. ஆம், இதில் பயிலும் குழந்தைகள் தாய்மொழியில் அல்லாது இந்தி மொழியிலும் ஆங்கிலத்திலுமே பாடங்களைக் கற்றுக் கொள்வார்கள்.

"மும்மொழித்திட்டம் என்பது ஒப்புக்குத்தான். இந்தி பேசும் மாநிலங்களுக்கு உண்மையில் இது இரு மொழித்திட்டம் தான். அதே இரு மொழித்திட்டம் தான் இந்த மாதிரிப்பள்ளிகளில் இந்தியா முழுவதும் அமுலாகப் போகிறது !

"கல்வி என்பது பூகோளம், விஞ்ஞானம், கணிதம் போன்றவை மட்டுமல்ல; அந்தந்தப் பிராந்தியத்தின் பண்பாட்டினைப் பிரதிபலித்து, மாணவரிடையே அதனை உணர்த்தவும் வளர்க்கவும் வேண்டும். அதற்காகத்தான் கல்வித்துறையை மத்திய மாநில அரசுகள் இரண்டுக்கும் பொதுவானதாக அரசியல் சாசனம் பேசுகிறது. இந்த மாதிரிப்பள்ளிகள் மூலம் இத்துறையில் மாநில அரசுகளின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன; கருத்துக்கள் அலட்சியப் படுத்தப் படுகின்றன.

"நாங்கள் இந்திக்கு விரோதிகள் அல்ல. பாரத நாட்டின் இதர மொழிகளைப் போல் அதற்குச் சம அந்தஸ்து கொடுங்கள், ஏற்கிறோம். உயர் அந்தஸ்து தருவதானால் எதிர்க்கிறோம், அவ்வளவே. மாநிலங்களில் பிரதேச மொழியான தாய்மொழி ஆட்சி செலுத்தும்; மாநிலங்களுக்கிடையே உறவுக்கும் மத்திய மாநில உறவுக்கும் அகில உலகத்தொடர்புக்கும் ஆங்கிலம் பயன்படும். இதுவே எங்கள் கொள்கை—பாரத மக்கள் அனைவருக்கும் தராசு முனை நியாயம் இதுவே.

"இந்தி ஏகாதிபத்தியம் செலுத்த, மற்ற பாரதநாட்டு மொழிகள் அதற்கு அடிபணிந்து கிடக்க, அம்மொழிகள் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்படுவதை யார் சகித்தாலும் தமிழன் சகிக்கமாட்டான்.

"எச்சரிக்கிறோம், இந்தியாவிலும் படிப்படியாக ஓர் இலங்கைப் பிரச்னையை உருவாக்காதீர்கள் !

'கல்கி' (15-6-86) ஏட்டின் தலையங்கம்